RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராமசரிதத்தில் சுட்டு, வினா மற்றும் போலி எழுத்துக்கள்

**இர. அனுசுயா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி சித்தூர், கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம், பாலக்காடு - 678101, கேரளா, இந்தியா

# Deictic, Interrogative, and Pseudo Letters in Ramacaritam

**R. Anusuya [a, *]**

[a] Department of Tamil, Government College, University of Calicut, Palakkad-678104, Kerala, India

* Corresponding Author: anushaanu2116@gmail.com

**ABSTRACT**

Literary works not only reflect the development of a language but also serve as mirrors of the social conditions, systems of governance, customs, traditions, and linguistic practices of the people living during the period in which they were composed. In this context, the earliest literary works of a language occupy a significant place in understanding its historical and linguistic evolution. Although Malayalam has evolved into an independent language today, an examination of its origins reveals that Tamil forms its foundational linguistic base. Historically and geographically, Tamil and Malayalam maintained a close relationship over an extended period, and both languages share numerous common features in their literary traditions. Ancient Tamil works such as *Silappatikaram*, *Pathitrupathu*, and *Akananuru* originated in the Chera region. Linguistic scholars generally maintain that the earliest Malayalam literary texts emerged on the foundation of classical Tamil literary traditions. Consequently, it may be inferred that ancient Tamil literary and grammatical conventions exerted a considerable influence on the formative stages of Malayalam literature. In this regard, *Rāmacaritam*, recognized as the earliest extant work of Malayalam literature, preserves several grammatical features inherited from Old Tamil. Based on the grammatical principles set forth in the Tamil grammatical treatises *Tolkāppiyam* and *Nannūl*, this article examines and elucidates the Tamil orthographic and grammatical elements found in *Rāmacaritam*, with particular emphasis on deictic letters (*Suṭṭu Eḻuttukkaḷ*), interrogative letters (*Viṉā Eḻuttukkaḷ*), and pseudo letters (*Pōli Eḻuttukkaḷ*). Through this analysis, the study highlights the continuity of Tamil grammatical traditions in the early development of Malayalam literature.

**Keywords:** Tamil literature, Malayalam literature, Grammatical features, grammatical traditions, Ramacaritam.

## முன்னுரை

மலையாளம் இன்று தனியொரு மொழியாக வளர்ச்சி பெற்றிருப்பினும், அது தோன்றிய சூழலை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அதன் ஆணிவேராக இருப்பது தமிழ்மொழியாகும். வரலாற்று ரீதியாகவும், புவியியல் அடிப்படையிலும் தமிழும் மலையாளமும் நீண்ட காலம் நெருங்கிய உறவு கொண்ட மொழிகளாக இருந்துள்ளன. இரு மொழிகளும் இலக்கிய உருவாக்கத்தில் பல்வேறு ஒற்றுமைக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, அகநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் சேர நாட்டில் எழுந்த நூல்களாகும். பழந்தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே மலையாள மொழியின் ஆரம்பகால இலக்கியங்கள் எழுந்துள்ளன என்பது மொழியியல் வல்லுநர்களின் கருத்தாகும். இதன் அடிப்படையில், பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் மலையாள மொழியின் தொடக்ககால இலக்கியங்களில் தாக்கம் செலுத்தியுள்ளன எனலாம். அவ்வகையில், மலையாள மொழியின் முதல் இலக்கியமான இராமசரிதத்தில், பழந்தமிழ் இலக்கணக் கூறுகள்

மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆகவே, தமிழ் இலக்கண நூல்களான, தொல்காப்பியம் மற்றும் நன்னூலை அடிப்படையாகக் கொண்டு, இராமசரிதத்தில் தமிழ் எழுத்திலக்கணக் கூறுகளான, சுட்டு, வினா மற்றும் போலி எழுத்துக்களை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

முதன்மை சான்றாதாரமாக இராமசரிதப் பாடல்கள் தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுப் எடுத்தாளப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறைகளாக பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டாய்வு முறை, விளக்கவியல் ஆய்வு முறை போன்ற அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இராமசரிதம்

மலையாள மொழியின் இலக்கிய வரலாற்றில் இரு பெறும் இலக்கிய வடிவங்கள் உருவெடுத்தன. அவை ஒன்று பாட்டிலக்கியம், மற்றொன்று மணிப்பிரவாள இலக்கியமாகும். பாட்டிலக்கியத்தின் முதல் நூலாகவும், மலையாள மொழியின் முதல் நூலாகவும் அறியப்படுவது இராமசரிதம் எனும் பக்தி இலக்கியமாகும். இந்நூலை முதன் முதலில் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர் ஹெர்மன் குண்டர்ட் ஆவார். இவர் வெளியிட்டுள்ள மலையாள நிகண்டு என்ற நூலின் முன்னுரையில், மலையாளத்தின் முதல் இலக்கியம் இராமசரிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் சீராமன் ஆவார். இவர் கொல்ல வருடம் 371 - இல் திருவிதாங்கூரை ஆண்டு வந்த வீரராம வர்மாவாக இருக்கக் கூடும் என உள்ளூர் பரமேசுவர ஐயர் கருதுகிறார். (கேரள சாகித்திய சரித்திரம். பகுதி 1- பக். 257) இந்நூல் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது என ஹெர்மன் குண்டர்ட், பி. கோவிந்தப்பிள்ளை, மற்றும் ஏ. ஆர். ராஜராஜவர்மா, ஆகியோர் குறிப்பிடுகின்றனர். (சம்பூர்ண மலையாள சாகித்ய சரித்ரம், முனைவர். பத்மனராமசந்திரன், பக்-64) இராமாயணத்தில் யுத்தகாண்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 1814 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை 164 படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. பாட்டிலக்கியத்திற்குரிய இலக்கணமாக,

த்ரமிடசங்கா தாக்ஷர நிபந்தமெ துகமோன

வ்ருத்த விசேஷ யுக்தம் பாட்டு (லீ. சூத். 11)

என லீலாதிலகம் வரையறுத்துள்ளது. இச்சூத்திரத்தில் இரண்டு விதிகளை லீலாதிலக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஒன்று, [த்ரமிடசங்காதாக்ஷரம்] தமிழ் நெடுங்கணக்கான உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் இணைந்து மொத்தம் முப்பது எழுத்துக்களைப் பயன்படுத்தி மட்டுமே பாட்டிலக்கியம் எழுத வேண்டும். மற்றும் தமிழில் இல்லாத சமஸ்கிருத ஒலிகளைப் பயன்படுத்தும் போது அவற்றை தற்பவமாக்கி தமிழ் எழுத்துக்களில் பயன்படுத்த வேண்டும். இரண்டாவது, எதுகை, மோனை அமையப்பெற்று, சமஸ்கிருத விருத்தங்களிலிருந்து மாறுபட்ட, திராவிட விருத்தங்களை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்பதாகும். பாட்டிலக்கிய விதிகள் முழுமையாகப் பொருந்தி வரும் நூலாக இராமசரிதம் அமைந்துள்ளது. இந்நூல் தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது என்றாலும், எந்த இலக்கண மரபின் அடிப்படையில் இதனைக் கட்டமைத்துள்ளனர் என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

## சுட்டெழுத்துக்கள்

ஒரு பொருளையோ இடத்தையோ சுட்டுவதற்குப் பயன்படும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் ஆகும். தமிழ் மொழியில் அ, இ, உ ஆகிய மூன்றையும் சுட்டெழுத்துக்கள் என தொல்காப்பியமும் (தொல். நூன். நூற்:31) நன்னூலும் (நன்.எழு,நூற்:66) அடையாளப்படுத்துகின்றன.

அ என்பது சேய்மைப் பொருளையும், இ என்பது அண்மைப் பொருளையும், உ என்பது இடைமைப் பொருளையும் உணர்த்தும்.

அ, இ, உ என்னும் எழுத்துக்கள் மூன்றும் சொல்லொடு உட்பிணைந்து காணப்படும். அந்நிலையில் அவை அகச்சுட்டு எனவும், சொல்லுக்குப் புறனாக அமையும் நிலையில் புறச்சுட்டு எனவும் பெயர்பெறும் என உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். அவன், இவன், உவன், அது, இது, உது என்பன அகச்சுட்டுகளாகும். அவ்வூர், அவ்வீடு போன்றவை புறச்சுட்டுகளாகும். சீராமனால்,

- அவன் (இ. பா.580), இவன் (இ. பா.579),

என்னும் அகச்சுட்டுகளும்,

- அப்போர்க்களத்தில் (இ. பா.844), அம்மதுமொழியாள் (இ.பா.1541), அப்பொழுது (இ.பா. 1519),
- இந்நிசிசரர்க்கோன் (இ. பா. 1531), இப்படை (இ. பா.52), இப்பிழ (இ. பா.1537), இவ்வண்ணம் (இ. பா. 37), இப்பொழுது (இ. பா.579)

போன்ற புறச்சுட்டுகளும் மிகுதியாக கையாளப்பட்டுள்ளன. அகர, இகர சுட்டுக்கள் மட்டுமே இராமசரிதத்தில் இடம்பெற்றுள்ளன. உகரச் சுட்டு இடம்பெறவில்லை. உகரச்சுட்டின் பயன்பாடு, நன்னூலின் காலத்திலேயே வழக்கிழந்தது என்பதை அக்கால இலக்கிய இலக்கணங்களின் வழி அறியலாம். பேச்சு வழக்கிலும் அகர, இகர சுட்டுக்களைப் போல பரவலான பயன்பாடு உகரச்சுட்டிற்கு இல்லை. ஆகவே, பாமர மக்களுக்காக எழுதப்பட்ட நூலான இராமசரிதத்தில் உகரச் சுட்டின் பயன்பாடு இடம்பெறவில்லை எனக் கொள்ளலாம்.

## வினா எழுத்துக்கள்

தொல்காப்பியர் நெட்டெழுத்துக்களை ஏழாகப் பாகுபடுத்துகிறார். அவையனைத்தும் ஓரெழுத்து ஒருமொழிகளாய்ப் பொருள் தரும் என்பதனையும் சுட்டுகிறார். அவற்றுள் ஆ, ஏ, ஓ ஆகிய மூன்றும் ஒன்றை வினவுவதற்குப் பயன்படுத்தப்படும் வினா எழுத்துக்களாகும். இவற்றைத் தொல்காப்பியர்,

ஆஏ ஓஅம் மூன்றும் வினாஅ. (தொல். எழு. நூற்: 32)

என்னும் நூற்பாவழி விளக்கியுள்ளார்.. ஆ, ஏ, ஓ மூன்றும் சொல்லிறுதியில் வினாவாக வரும். நன்னூலார் மொழிக்கு முதலில் வரும் எ, யா ஆகிய பன்மை வினாப்பெயரையும் கூட்டி,

எ,யா முதலும் ஆ, ஓ ஈற்றும்

ஏ இருவழியும் வினாவாகும்மே (நன்.எழு.நூற்:67).

என விளக்கியுள்ளார். இவற்றுள் எகரம் முதற்கண் புறவினாவாகும். தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் யாது, யாவை என்பன எது, எவை எனவும், யாவன், யாவள் என்பவை எவன், எவள் எனத் திரிந்து வழங்கியதால் உரையாசிரியர்களும், நன்னூலாரும் எகரத்தை வினா எழுத்தாக ஏற்றுக்கொண்டனர் எனக் கொள்ளலாம்.

இராமசரிதத்தில்,

- ஆமோ? உளரோ? (இ. பா. 52), ஆயிதோ? (இ. பா. 43), ஒன்றுமோ? (இ. பா. 1515),

முதலிய சொற்களில் ஓகாரம் வினாப்பொருளில் வந்துள்ளது. எகர ஏகாரத்தை முதன்மையாக உடைய வினாச்சொற்களாக,

- எப்புறம்? (இ. பா. 1515), எவ்வழி (இ.பா.646), ஏவன் (இ. பா. 558), ஏவனோ? (இ. பா. 1515)

போன்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன.

## போலி எழுத்துக்கள்

உயிரெழுத்துக்களில் ஐகார, ஔகாரத்திற்கு, மற்ற நெடில் எழுத்துக்களைப் போல தனிக் குறில் எழுத்துக்கள் இல்லை. இவற்றைக் கூட்டொலிகள் என மொழி நூலார் குறிப்பிடுவர். தொல்காப்பியர் இதனைப் போலி என்கிறார். வடமொழி இலக்கண நூலார் சந்தியக்கரம் எனக் குறிப்பிடுவர். சந்தியக்கரம் என்பதற்கு கூட்டெழுத்து என்று பொருள். போலி எழுத்தைத் தொல்காப்பியர்,

அகரம் இகரம் ஐகாரம் ஆகும் (தொல். எழு. நூற்: 54)

அகரம் உகரம் ஔகாரம் ஆகும் (தொல். எழு. நூற்: 55)

என்று எடுத்துரைக்கிறார். வடமொழியிலும் அகர, இகர உயிர்களின் கூட்டெழுத்தாக ஐகாரமும், அகர, உகர உயிர்களின் கூட்டெழுத்தாக ஔகாரமும் பயின்று வந்துள்ளன. மேலும் கூட்டெழுத்து பற்றி தனது தனிப்பட்ட கருத்தையும் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார்.

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்

ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும். (தொல். எழு.நூற்: 56)

அகர உயிரும் யகர மெய்யும் சேர்ந்த கூட்டெழுத்தும் (அய்) ஐகாரமாகும் என்கிறார். ஆக தொல்காப்பியர் காலகட்டத்தில் ஐகாரம் குறித்து இருவேறு கருத்துகள் நிலவின என்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது. இவ்விரு கருத்துகளில் அகரமும் யகரமும் சேர்ந்த கூட்டெழுத்து ஐகாரமாகும் என்ற கருத்தே பொருந்துவதாக உள்ளது.

ஐகார ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும்போது,

ஐ ஆய் ஆகும் (தொல். சொல். நூற்: 123)

என்கிறார் தொல்காப்பியர்.

எ.கா : அன்னை - அன்னாய்

இங்கு ஐ என்பது ஆய் என்றாகியது என்பதை விட அய் என்பது ஆய் என்றாயிற்று என்பதே பொருத்தமானதாக அமைகின்றது. தொல்காப்பியர் ஐகாரத்திற்கு கூறியது போல ஔகாரத்திற்கு சிறப்பு விதி கூறவில்லை. ஆனால் நச்சினார்கினியரும் நன்னூலாரும் தொல்காப்பியர் கூறிய ஐகார விதியோடு, அகரம் முன் உகரமும் வகர மெய்யும் நின்றால் ஔகாரம் ஆகும் என்ற விதியையும் வகுத்துள்ளார். (நன்.எழு.நூற்.125) எனவே நன்னூலார் காலத்தில் இப்பயன்பாடு நிலைபெற்றிருந்தது என்பதை இதன் மூலம் உய்த்துணரலாம். காலத்திற்கேற்ப இலக்கணங்களில் மாற்றம் நிகழும் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

இராமசரிதத்தில், வடமொழி மரபல்லாத, தமிழ் மரபை அடியொற்றி தொல்காப்பிர் கூறிய ஐ - அய் ஆதல் என்ற வடிவம் பல பாடல்களிலும் பயின்று வந்துள்ளது.

- மய்யலடக்கியொண் புனலாட்டி யாடகள் நல்லவ (இ. பா. 1208)
- பரநாரிமாரெ யறிவுள்ளவர்கள் கய்க்கொள்வதின் (இ. பா. 1239)
- தந்தோழத்தோடந்நு நிசாசரி தய்யலாளணெ்ந்தமயும் (இ. பா. 1378)
- கழிந்த நாள் மருவார் போரில் கணகளாம் கய்யால் (இ. பா. 1214)
- தாரமணிந்த மார்விடவும் மறய்த்து கரங்களால் மெய் (இ. பா. 1228)
- ஒந்நினிலொந்நு மேற்றரமான மர்ம்மங்ஙளால் உரய்ப்பான் (இ. பா. 1229)
- நாயகர்கள்க்கு முற்றவர்கள்க்கும் வெற்றி தழய்த்துதென்னால் (இ. பா. 1235)
- கொடுப்புதே வேந்தனுக்கு குயில்மொழியாளை யய்யா (இ. பா. 76)

இந்த சொற்களில் ஐகாரம், (மைய்யல், கைக்கொள்வதின், தைய்யலாள், மறைத்து, உரைப்பான், தழைத்து) அய் என்னும் போலி எழுத்தாக மொழி முதலிலும், இடையிலும் இடம்பெற்றுள்ளன. மற்ற பல பாடல்களில் ஐகார வடிவமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- தாரார் தழைக்குழல் துமித்தரதன் வாலன் (இ. பா. 459)
- அம்பரம் பகலேதி, ரவேதாரம்பர் வைரிகளேவர் பதங்கன் (இ. பா. 509)
- வரிமைக்கண் மடவாரொக்க வாங்ஙினாரதில்க்கு முன்னே. (இ. பா.1219)
- துயரம் வாரா வைரிகளெத்துயராதவர்க்கு போரிலெங்ஙும் (இ. பா. 79)

எனவே, தொல்காப்பியர் மற்றும் நன்னூலார் ஐகாரத்திற்கு கூறிய அய் என்னும் போலி வடிவமும், ஐகாரம் என்னும் மூல வடிவமும் இராமசரிதத்தில் விரவிக் காணப்படுகின்றன. ஆனால் அகரமும் வகரமும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்ற நன்னூலாரின் சிந்தனை இராமசரிதத்தில் இடம்பெறவில்லை.

## முடிவுரை

மலையாளப் பாட்டிலக்கியத்தின் முதல் நூலான இராமசரிதத்தில், தமிழ்மொழியின் தாக்கம் மிகுந்து காணப்படுகின்றது. இராமசரிதப் பாடல்களில் காணப்படும் இலக்கணக் கூறுகள், தொல்காப்பியம் மற்றும் நன்னூலின் இலக்கணத்தை அடியொற்றியே அமைந்துள்ளன. இக்கருத்தாக்கத்தை உறுதி செய்யும் விதமாக, தமிழ் மொழிக்கென நுட்பமாகக் கூறப்பட்ட சுட்டு, வினா மற்றும் போலி எழுத்துக்கள் இராமசரிதத்தில் அதே ஒழுங்கமைவுடன் இடம்பெற்றிருப்பதை மேற்கண்ட சான்றுகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. “இராமசரிதம், தமிழ் இலக்கண மரபை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது” என்னும் கருத்தாக்கத்திற்கு வலுசேர்க்கும் விதமாக இவை அமைகின்றன.

## References

இளம்குளம் குஞ்ஞன் பிள்ள, (1972) இராமசரிதம் (உரை), சத்யா நிகேதன், திருவனந்தபுரம், கோட்டயம், கேரளா

இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், கௌரா புத்தக மையம்,

இளம்குளம் குஞ்ஞன் பிள்ள, லீலாதிலகம், (உரை) சத்யா நிகேதன், திருவனந்தபுரம், அக்டோபர், கோட்டயம், கேரளா

உள்ளூர் எஸ். பரமேசுவர ஐயர், (1953) கேரள சாகித்ய சரித்ரம், பாகம் - 1 திருவனந்தபுரம்,

சோம. இளவரசு, (2004) நன்னூல் எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பொற்கோ, தமிழ் இலக்கணக் கோட்பாடுகள், பூம்பொழில் வெளியீடு, சென்னை

டாக். பத்மன ராமச்சந்திர நாயர், (2008) சம்பூர்ண மலையாள சாகித்ய சரித்திரம், டி. எஸ். புக்ஸ், கேரளா

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License